(6) ஒழுங்குப் பிரச்னை.

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். இந்தச் சபை நடவடிக்கைகள் சம்பந்தமாகத்தான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஒத்தி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாக நாங்கள் கொடுக்கும்பொழுது, யார் முதலிலே கொடுத்தார்கள், யார் இரண்டாவதாகக் கொடுத்தார்கள் என்ற வரிசையில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா அல்லது இதிலேயும் பெரிய கட்சி என்று பார்த்து அந்தக் கட்சி வரிசையில் வாய்ப்பு கொடுக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது எதை யார் யார் எப்பொழுது கொடுத்தார்கள் என்று மணிக்கணக்கைப் பார்த்தால், இன்றைக்குக் கொடுத்தவர்களில் திரு. சுப்புதான் முதலில் கொடுத் திருக்கிறார்கள். ஒரே நாளில் சுப்புவைத் தவிர, காலையிலே இரண்டு பேர் கொடுத்தார்கள் மீதி 4-ஆம் தேதி கொடுக்கப்பட் டிருக்கிறது. இதிலே முதலிலே கொடுத்தவர்களுக்கு முதலிலே வேண்டுமென்று போடச் சொன்னால் முதலிலே கொடுத்தவர் களுக்குத்தான் போட வேண்டும். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கட்சியின் அடிப்படையிலே எல்லோரும் கொடுத்திருப்பதால் எதிர்க்கட்சி. அடுத்த எதிர்க்கட்சி என்று வரிசைக் கிரமமாகத்தான் இருக்கிறதே தவிர முன்னால் கொடுத் தவர்களுக்கு முன்னால் தாருங்கள் என்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஜேம்ஸ் அவர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அவர் பேச வேண்டுமென்றால் பேசட்டும், எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காய்யா அவர்களும் பல விவரங்களைச் சொன்னார்கள்.

1978 மார்ச் 6] [திரு. சோ. அழகர்சாமி]

இந்த ஸ்டிரைக் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பெரும்பகுதி இடங்களில் நடந்து, அரசு ஊழியர்கள் அத்தனைபேரும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டு, பெரும்பகுதி அலுவலகங்கள் நேற்றைக்கு முன்தினம், அதாவது சனிக்கிழமையன்று காலியாக இருந்தது. எங்களுடைய கோயில்பட்டியில், நான்போய் இரண்டு மூன்று நாட்களாகிவிட்டது, அங்கு தமிழக அரசின் எல்லா அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன, அதனால் பெரும்பகுதி வேறு பல வேலைகள் முடங்கக்கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. இதிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அழகர்சாமி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கூடக் கேட்டுக்கொள்கிறேன். அழகர்சாமி அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் முதலிலே கொடுத்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், பிறகு அழகர்சாமி கொடுத்தார்களேயானால் அந்த உரிமையை அந்த உறுப்பினர்களுக்குத்தான் தர வேண்டியிருக்குமே தவிர கட்சித் தலைவருக்குக் கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற கட்சித் தலைவர்களுடைய அபிப்பிராயத்தையும் கூறினால் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. மு கருணாநிதி: தலைவரவர்களே, ஒரே கட்சியிலே உள்ள கட்சித் தலைவரும், உறுப்பினர்களும் கொடுக்கும்பொழுது உறுப்பினர்கள் முதலிலே கொடுத்திருந்து, ஆனால் உறுப்பினர், தலைவர் பேசுவார் என்று அனுமதி கொடுத்தால் உறுப்பினரை நிறுத்திவிட்டுத் தலைவர் பேசுவதற்கு அனுமதிப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கடைப்பிடிக்க வேண்டிய முறை, அழகர்சாமியின் கட்சிக்காரர்கள் 8-50 மணிக்குக் கொடுத்து, அழகர்சாமி அவர்கள் 8-55 மணிக்குக் கொடுத்தால் 8-50 மணிக்குக் கொடுத்தவரைத்தான் அனுமதிப்பேன். அவர் கேட்கின்ற கோரிக்கை முதலிலே கொடுத்தவருக்கு

முதலிலே கொடுக்க வேண்டுமென்பது. ஆகவே, நான் கட்சித் தலைவர், முதலிலே கொடுக்க வேண்டுமென்றால் அதை அனுமதிக்க

திரு. மு. கருணாநிதி: அது தப்பு. 8-50 மணிக்குக் கொடுத்த உறுப்பினர் தங்கள் கட்சித் தலைவர் பேசுவார், நான் பேசவில்லை என்று சொல்லிவிட்டால் அதற்குப்பிறகு கட்சித் தலைவருக்கு அனுமதி தருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படித் தந்துதான் ஆக வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே. இதுவரையி லேயும் அனுசரித்துக்கொண்டு வருவது, ஒரு கட்சியைச் சார்ந்த மூன்று பேர்கள், இரண்டு பேர்கள் கொடுத்திருந்தால் அதில் யாராவது ஒருவர் பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். அப்படி யிருக்கும்பொழுது அந்த உறுப்பினர், கட்சித் தலைவர் பேச வேண்டுமென்று சொன்னால் கட்சித் தலைவருக்குக் கொடுப்பீர்கள் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே கொடுப்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் என்று வைத்துக்கொள்ளுங் கள், அவரைத்தான் முதலில் போடுவேன், அப்படித்தான் திரு. அழகர்சாமி அவர்களின் கோரிக்கை இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, உங்களிடம் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கும்பொழுது நேரம் போட வேண்டுமா, யார் முதலிலே கொடுத்தார்கள் என்று தெரிவதற்கு நேரம் போட வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொண்டு வந்து தரும்பொழுது நானே குறித்துவிட்டு கையெழுத்துப்போடுவேன். இதுவரையில் நேரம் போடுவது இல்லை. ஆனால் இப்பொழுது அவர்களே எழுப்பிவிட்ட காரணத்தால் நான் எச்சரிக்கையாக இருக்கவேண்டியதாக இருக்கிறது. உறுப்பினர்கள் எந்த நேரத்திலே கொடுத்தாலும் நேரத்தைக் குறிப்பிட்டுக் கையொப்பம் இடுவேன்